செ.வெ.எண் : 07 நாள் : 03.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சைக்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பாதாக புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார் !!!**

கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை அளிக்கப்படும் தனியார் மருத்துவமனைகளில் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தினைவிட கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக நோயாளிகள் புகார் அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், 4 அரசு மருத்துவமனைகள், 93 தனியார் மருத்துவமனைகள், மற்றும் அவற்றின் கீழ் இயங்கும் 13 சிறப்பு சிகிச்சை மையங்களில் கொரோனா வைரஸ் தொற்றிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு சிகிச்சை கட்டணங்களை நிர்ணயித்துள்ளது. அதன்படி,

**அரசாணை (நிலை) எண்.251-ன்படி,கோவிட் 19 சிகிச்சைக்கானகட்டணம் நிர்ணயம் (ரூபாய்)**
**கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள மருத்துவமனைகள் விவரம்**

| வ. எண் | மருத்துவமனையின் பெயர் | நாளொன்றிற்கான கட்டணம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆக்சிஜன் இல்லாதமிதமானசிகிச்சை | ஆக்சிஜன் உதவியுடன் கூடிய சிகிச்சை | தீவிர சிகிச்சை பிரிவு வெண்டி-லேட்டர் வசதியுடனான சிகிச்சை | தீவிர சிகிச்சை பிரிவில் ஊடுருவாத வெண்டிலேட்டர் வசதி (Non Invasive Ventilation) | தீவிர சிகிச்சை பிரிவில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு (ICU With O2 only as Stepping Down) |
| **A1, A2 தர மருத்துவமனைகள்** | | | | | | |
| 1. | ஜி.குப்புசாமி நாயுடு மருத்துவமனை. | 5000 | 20000 | 40000 | 35000 | 30000 |
| 2. | ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை | | | | | |
| 3. | கே.எம்.சி.எச் மருத்துவமனை | | | | | |
| 4. | கே.ஜி. மருத்துவமனை | | | | | |
| 5. | ஸ்ரீ அபிராமி மருத்துவமனை | | | | | |
| 6. | கங்கா மருத்துவமையம் மற்றும் மருத்துவமனை | | | | | |
| 7. | கற்பகம் மருத்துவமனை, கோயம்புத்தூர் | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8. | ஜெம் மருத்துவமனை கோயம்புத்தூர் | | | | | |
| 9. | ஸ்ரீரெஸ்மிகா மருத்துவமனை (FIMS) | | | | | |
| 10. | ஒன்கேர் மருத்துவமனை | | | | | |
| 11. | பி.எஸ்.ஜி. மருத்துவமனை | | | | | |
| 12. | கல்பனா மெடிக்கல் சென்டர், கவுண்டம்பாளையம். | 5000 | 20000 | 40000 | 35000 | 30000 |
| 13. | கே. கோவிந்தசாமி மெமோரியல் மருத்துவமனை> சரவணம்பட்டி. | | | | | |
| 14. | கொங்குநாடு மருத்துவமனை | | | | | |
| 15. | ஹிந்துஸ்தான் மருத்துவமனை | | | | | |
| | | **A3 முதல் A6 வரை தர மருத்துவமனைகள்** | | | | |
| 16. | மனு மருத்துவமனை சுங்கம் | | | | | |
| 17. | அட்லஸ் பெயின் கேர் மருத்துவமனை | | | | | |
| 18. | பி.ஆர்.ஜே ஆர்த்தோ மையம் | | | | | |
| 19. | கோயம்த்தூர் சைல்ட் ட்ரஸ்ட் மருத்துவமனை | | | | | |
| 20. | கோயம்புத்தூர் டயாபெடிக் பவுண்டேசன் | | | | | |
| 21. | சி.எஸ்.ஆர் நர்சிங் ஹோம், கோயம்புத்தூர் | | | | | |
| 22. | டாக்டர் முத்தூஸ் மருத்துவமனை சரவணம்பட்டி | 5000 | 18500 | 36500 | 32000 | 27500 |
| 23. | டாக்டர் செங்காளியப்பன் மருத்துவமனை | | | | | |
| 24. | பாத்திமா மருத்துவமனை போத்தனூர் | | | | | |
| 25. | கொங்குநாடு கிட்னி சென்டர் | | | | | |
| 26. | கௌஷிகா மருத்துவமனை | | | | | |
| 27. | மசானிக் மெடிக்கல் சென்டர், கோயம்பத்தூர். | | | | | |
| 28. | மௌத்தி மருத்துவமனை | | | | | |
| 29. | என். ஜி மருத்துவமனை சிங்காநல்லூர் | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30. | ராயல்கேர் சூப்பர் சிறப்பு மருத்துவமனை. | 5000 | 18500 | 36500 | 32000 | 27500 |
| 31. | சத்யா மெடிக்கல் சென்டர் | | | | | |
| 32. | எஸ்.ஜி.ஆர் மருத்துவமனை, காட்டூர் | | | | | |
| 33. | அபிநந்த் மருத்துவமனை | | | | | |
| 34. | ஸ்ரீபாலா மருத்துவமனை, ராமநாதபுரம். | | | | | |
| 35. | ஸ்ரீபாலாஜி மருத்துவமனை, சுந்தராபுரம். | | | | | |
| 36. | வி.ஜி. மருத்துவமனை, | | | | | |
| 37. | விமல்ஜோதி மருத்துவமனை, சரவணம்பட்டி.. | | | | | |
| 38. | ஸ்ரீசிவா மருத்துவமனை, கணபதி. | | | | | |
| 39. | என்ஆர்பி மருத்துவமனை | | | | | |

**கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வெளியே உள்ள மருத்துவமனைகள் விவரம்**

| வ. எண் | மருத்துவமனையின்பெயர் | நாளொன்றிற்கானகட்டணம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆக்சிஜன் இல்லாத மிதமான சிகிச்சை | ஆக்சிஜன் உதவியுடன் கூடிய சிகிச்சை | தீவிர சிகிச்சை பிரிவு வெண்டி-லேட்டர் வசதியுடனான சிகிச்சை | தீவிர சிகிச்சை பிரிவில் ஊடுருவாத வெண்டி லேட்டர் வசதி (Non Invasive Ventilation) | தீவிர சிகிச்சை பிரிவில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய சிகிச்சை படிப்படியாக குறைப்பதற்கு (ICU With O2 only as Stepping Down) |
| தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் 30-க்கும் மேல் படுக்கை வசதி கொண்டவை | | | | | | |
| 1. | கே.எம்.சி.எச் கோவில்பாளையம் | 5000 | 15000 | 35000 | 30000 | 25000 |
| 2. | ராயல் கேர் மருத்துவமனை, நீலாம்பூர் | | | | | |
| 3. | குமரன் மெடிக்கல் சென்டர் | | | | | |
| 4. | கே.ஜி.எம்.மருத்துவமனை | | | | | |
| 5. | கே.எம்.சி.எச், சூலூர் சென்டர் | | | | | |
| 6. | சரஸ்வதி மருத்துவமனை சிந்தாமணிபுதூர் | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A3 முதல் A6 தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் 30-ற்க்கும் குறைவான படுக்கை வசதி கொண்டவை | | | | | | |
| 7. | அருண் மருத்துவமனை | | | | | |
| 8. | ஆல்வா மருத்துவமனை | | | | | |
| 9. | கே.ஆர்.ஹெல்த் கேர், பெ.நா.பாளையம், கோயம்புத்தூர் | | | | | |
| 10. | கே.பி.எஸ் மருத்துவமனை, மேட்டுப்பாளையம் | | | | | |
| 11. | என்.எம். மருத்துவமனை, அன்னூர். | | | | | |
| 12. | சீஷா காருண்யா மருத்துவமனை | 5000 | 13500 | 31500 | 27000 | 22500 |
| 13. | எஸ்.எம்.எஃப் மருத்துவமனை, அன்னூர் | | | | | |
| 14. | சௌமியா மருத்துவமனை காரமடை | | | | | |
| 15. | சுபா மருத்துவமனை, மேட்டுப்பாளையம். | | | | | |
| 16. | ஏஎஸ்டி நர்ஸிங் ஹோம், பொள்ளாச்சி | | | | | |
| 17. | பில்ஸ் மருத்துவமனை பொள்ளாச்சி | | | | | |

இவ்வாறு அரசு அறிவித்துள்ள தொகையைவிட கூடுதல் கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவமனைகளின் மீது நடவடிக்கை எடுக்கபடும் எனவும், பெறப்படும் புகார்களை கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்ள பொள்ளாச்சி சார் ஆட்சியர் திரு.வைத்தியநாதன் இ.ஆ.ப., அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், கூடுதல் கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவமனைகளின் மீது மாவட்ட நிர்வாகத்தின் கொரோனா வைரஸ் தொற்று சிறப்பு கட்டளை மையத்தினை (Control Room)1077 என்ற எண்ணிலோ, 1800 425 3993 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண்ணிலோ, Covidcomplaints@gmail.com, என்ற மின்னஞ்சல் முகவரியிலோ, 9488440322 (**04.06.2021 முதல்**) என்ற எண்ணிற்கு வாட்ச்ஆப் செயலி (**Whatsapp**) மூலமாகவோ புகார் அளித்தால், புகார் தக்க முறையில் விசாரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டம் மற்றும் பேரிடர் மேலாண்மை சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் சம்மந்தப்பட்ட தனியார்

மருத்துவமனை மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**